அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2018.

வகுப்பு : 10. தமிழ் இரண்டாம் தாள். மதிப்பெண்கள் : 100.

விடைத்தாள் குறிப்புகள்.

உரிய விடையை எழுதுக 5X1=5 கோடிட்ட இடம். 5X1=5.

1. முப்பது.
2. குறிப்புப் பெயரெச்சம்.
3. உவமைத் தொடர்.
4. கைக்கிளை, பெருந்திணை.
5. ஆறு.
6. கதிர்வேல் வெற்றிலை தின்றான்
7. எற்பாடு.
8. உலகியல்.
9. பஃறொடை வெண்பா.
10. செம்மொழிச் சிலேடை.

சுருக்கமாக விடையளிக்க. 10X1=10

11. காய்கனி, தாய்தந்தை (இது போல் வேறு ஏதேனும் எ.கா இருந்தால் மதிப்பெண் வழங்கலாம்)
12. ரிக், யசூர், சாம, அதர்வண (அ) அறம், பொருள், இன்பம், வீடு.
13. பொங்கல் வைப்பதற்கு வெண்கலப் பாத்திரம் வாங்கினேன்.
14. கடைத்தெருவில் தைத்த உடையை வாங்கினேன்.
15. வண்டு முரல கோழி கொக்கரித்தது.
16. மனித இனத்தின் மரபுச் செல்வமாகத் தமிழ்மொழி விளங்குகிறது.
17. பாரதியார் வள்ளலாரைப் "புது நெறி கண்ட புலவர்" என்று போற்றினார்.
18. பொய்யானவற்றைக் கூறுதல்
19. உரிச்சொல் தொடர்.
20. படிக்கட்டு, நூலைப் படி. (பொருத்தமாக வேறு பதில் இருந்தால் மதிப்பெண் வழங்கலாம்)

எவையேனும் ஐந்தனுக்கு விடையளி. 5X2=10

21. ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும் அச்சொல்லே பிரிந்து நின்று வேறு பொருளையும் தந்து தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவது.
எ.கா. அந்தமான், பலகை, வைகை, தாமரை, வேங்கை.

22. ஒரு சொல், தொடரில் முன்னும் பின்னும் வரும் சொற்களின் தொடர்பாலும், குறிப்பாலும் ஒரு பாலை நீக்கி மற்றொரு பாலைச் சுட்டுவது.
எ.கா உயர்திணை : ஐவர் கோலமிட்டனர்
அஃறிணை : இம்மாடு வயலில் உழுகிறது.

23. ★ உடன்பட்டுக் கூறும் விடை நேர்விடை.
எ.கா "இது செய்வாயா?" என்று வினவிய போது செய்வேன் என்பது.
★ 'இது' என்பது போலச் சுட்டிக் கூறும் விடை சுட்டுவிடை.
எ.கா சென்னைக்கு வழி யாது? என்றால் இது என்பது.

24. நிலமும், பொழுதும் முதற்பொருள் ஆகும்.
காடும் காடு சார்ந்த இடமும் – முல்லை நிலம்.
கார்காலம் – பெரும்பொழுது.
மாலை – சிறு பொழுது.

25. பாடுதற்குத் தகுதியுடைய ஓர் ஆண்மகனின் கல்வி, வீரம், செல்வம், புகழ், கருணை முதலியவற்றைப் போற்றிப் பாடுவது.
பாடு + ஆண் + திணை = பாடாண்திணை

26. நான்கு வகைப்படும்.
1. நேரிசை ஆசிரியப்பா.
2. இணைக்குறள் ஆசிரியப்பா.
3. நிலைமண்டில ஆசிரியப்பா.
4. அடிமறி மண்டில ஆசிரியப்பா.

27. உயிர் 12, மெய் 18 ஆக முப்பது எழுத்துக்களை முதலெழுத்து எனவும் அவற்றைச் சார்ந்து வரும் எழுத்துக்களை சார்பெழுத்து எனவும் கூறுவர்.

எவையேனும் இரண்டிற்கு விடையளி. 2×5=10

28) ஆறு வகைப்படும்.
1. அறி வினா
2. அறியா வினா
3. ஐய வினா
4. கொளல் வினா
5. கொடை வினா
6. ஏவல் வினா

1. அறிவினா: தான் ஒரு பொருளை நன்கறிந்திருந்தும் அப்பொருள் பிறர்க்குத் தெரியுமா என்பதை அறியும் பொருட்டு வினவுவது.
எ.கா திருக்குறளை இயற்றியவர் யார்? (ஆசிரியர் மாணவனிடம் கேட்பது)

2. அறியா வினா: தான் அறியாத பொருளை அறிந்து கொள்வதற்காகப் பிறரிடம் வினவுவது
எ.கா எட்டுத்தொகை நூல்களுள் புறம் பற்றியனவை எவை? என மாணவன் ஆசிரியரிடம் கேட்பது.

3. ஐய வினா: ஐயத்தினைப் போக்கிக் கொள்வதற்காக வினவப்படுவது.
எ.கா அங்கே கிடப்பது பாம்போ? கயிறோ?

4. கொளல் வினா: ஒரு பொருளை வாங்கும் பொருட்டு கடைக்காரரிடம் வினவுவது.
எ.கா. பருப்பு உள்ளதா?

5. கொடை வினா: ஒரு பொருளைக் கொடுப்பதற்காக பிறரிடம் வினவுவது.
எ.கா மாணவர்களே! உங்களுக்குச் சீருடை இல்லையோ?

6. ஏவல் வினா: ஒரு தொழிலைச் செய்யும் படி வினவுவது.
எ.கா மனப்பாடச் செய்யுளைப் படித்தாயா?

29. இக்குறளில் சொல்பின்வரு நிலையணி பயின்று வந்துள்ளது.

அணி: செய்யுளில் முன்னர் வந்த சொல், மீண்டும் மீண்டும் வந்து வெவ்வேறு பொருளைத் தருவது சொல்பின்வரு நிலையணி.

எ.கா துப்பார்க்குத் துப்பாய......

அணிப் பொருத்தம்: துப்பு என்ற சொல் உண்பவர், உணவு, உண்ணும் பொருள் என பல பொருளில் வந்துள்ளது.

(அல்லது)

அணி: இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது, கவிஞர் தம் குறிப்பினை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி. (தன் + குறிப்பு + ஏற்றம் + அணி)

எ.கா தையல் துயர்க்குத் தரியாது.... (வேறு பொருத்தமான பாடல் இருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)

அணிப்பொருத்தம்: கோழிகள் கூவுதல் இயற்கை. ஞாயிற்றைக் கோழிக் கூட்டம் கூவி அழைப்பது - தற்குறிப்பேற்றம்.

அலகிடுதல்

30. மறப்பி|ன்று = நிரை + நிரை = கருவிளம்.

மோத்|துக் = நேர் + நேர் = தேமா.

கொள|லா|கும் = நிரை + நேர் + நேர் = புளிமாங்காய்

பார்ப்|பான் = நேர் + நேர் = தேமா

பிறப்|பொழுக்|கங் = நிரை + நிரை + நேர் = கருவிளங்காய்

குன்|றக் = நேர் + நேர் = தேமா.

கெடும் = நிரை = மலர்.

இக்குறளில் 'மலர்' என்னும் வாய்ப்பாடு வந்துள்ளது.

ஏதேனும் இரண்டிற்கு விடையளி. 2×5=10

(கீழ்க் கண்ட தலைப்புகளை விளக்கியிருப்பின் மதிப்பெண் வழங்குக)

31. ★ முன்னுரை.
- ★ கமலநாதன்.
- ★ நண்பனின் மரணம்.
- ★ மரணம் தந்த மனமாற்றம்
- ★ மெல்ல மெல்ல மற.
- ★ கமலநாதனின் முயற்சி.
- ★ முடிவுரை.

32. ★ முன்னுரை
- ★ அகழாய்வு நடைபெறும் முறை.
- ★ கடலுக்கடியில் அகழாய்வு.
- ★ அகழாய்வில் இலக்கியங்கள்.
- ★ அருங்காட்சியகங்கள்.
- ★ முடிவுரை.

33. ★ முன்னுரை
- ★ தம்பிக்குக் கடிதம்.
- ★ பொங்கல் புதுநாள்
- ★ நில மடந்தையின் விளையாட்டு
- ★ புலவர்கள் போற்றும் பொங்கல்
- ★ முடிவுரை.

3+2 = 5

34.
(அ) மாலதி பள்ளி நூலகரிடம் ஆங்கில அகராதி, உலக வரைபடம், அறிவியல் இதழ்கள் எந்த அடுக்கில் இருக்கிறது என வினவினாள்.

(ஆ) (1) சாக (2) கஅ (3) உ௦கஅ (4) க௦.

3+2 = 5

35 (அ). தற்காலம் கணினியுகம் ஆகும். கணினிகள் மேன்மேலும் வாழ்வின் ஒரு பகுதியாக உருவாகி வருகின்றன. இன்று வாணிகம், நிறுவனம், தொழிற்சாலைகள் தொடர்பாகவும் மற்றும் அரசுத் துறைகளின் செயல்பாடுகளிலும் அளவற்ற தகவல் பராமரிப்புத் தேவைப்படுகிறது. தகவல் பரிமாற்றங்களில் கணினி அதிவிரைவாகச் செயல்படுகிறது.

(ஆ) (1) காலத்தே கடமையைச் செய் (2) காற்றுள்ள போதே தூற்றிக் கொள். (3) எலி வளையானாலும் தனிவளை வேண்டும் (4) செய்யும் தொழிலே தெய்வம்.

36. (அ) கதையைச் சரியாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக. 1×5 = 5
(அல்லது)
(ஆ) உழைப்பு (அ) கார்மேகம் – சரியாக கவிதையிருப்பின் மதிப்பெண் வழங்குக.

37. தலைப்பு : செந்தமிழ்நாடு. 1×5 = 5
திரண்ட கருத்து, பொருள் நயம், சொல்நயம்.

எதுகை: செந்தமிழ் தந்தையர் காவிரி மேவிய மோனை: காவிரி கண்டதோர் மேவிய மேனி அணி: உருவக அணி

38. பெயர் : கயல்விழி
வங்கியின் பெயர் :
ரூபாய் : 15,000/-
தேதி :
பண விபரம் :
கையெழுத்து :

(படிவத்தில் சரியாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக) 5.

3+2 = 5

39. (அ) அன்பரசு வேறு இடத்தில் தனிப்படிப்பு வைத்துக் கொள்வான். அத்துடன் பள்ளியில் பாடங்களை நன்கு கவனமுடன் படித்து அதிக மதிப்பெண் பெறவும் முயற்சி செய்வான்

(அ)
(ஆ) நீங்கள் செய்வது எனக்குப் பிடிக்கவில்லை என்று நேரடியாகவே அவரிடம் கூறிவிட்டு நடந்தவற்றையெல்லாம் வீட்டிலும் சொல்லிவிடுவேன்.
(இ) இல்லை. காரணம் பள்ளியில் நடத்தும் பாடத்தை அன்றே வீட்டில் படித்து விடுகிறேன்.

ஆ. (அ) வழி மாற்றுத் திறனாளி சாலையைக் கடப்பதற்கு உதவி செய்வேன்.
(ஆ) பிறர் நிலையில் தன்னை வைத்துப் பார்த்தல்.

1 X 10 = 10

40.(அ). அனுப்புநர் :

பெறுநர் :

ஐயா

பொருள் :

இடம், நாள் :

உறைமேல் முகவரி :

(சரியாக விடையளிப்பின் மதிப்பெண் வழங்கலாம்)

(அல்லது)

(ஆ) படித்து மகிழ்ந்த நூலைப் பற்றி நண்பனுக்குக் கடிதம்.

41. கட்டுரை வடிவில் விடை தருக. 1 X 10 = 10

(அ) சாலை விதிகள்

* முன்னுரை
* அடிப்படை போக்குவரத்து விதிகள்.
* சட்டத்தை மதித்தல்.
* சாலை விதிகளை பின்பற்றல்
* விபத்துகளைத் தடுத்தல்.
* முடிவுரை.

(அல்லது)

(ஆ) மழைநீர் சேமிப்பு

* முன்னுரை
* நீரின்றி இயங்காது உலகம்
* மழைநீரைச் சேமித்தல்.
* மழைநீரின் பயன்கள்.
* மழைநீரைச் சேமிக்கும் வழிமுறைகள்.
* முடிவுரை.

ப. சுந்தரேசன்,
பட்டதாரி தமிழாசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி - நத்தம்.
தொட்டியம் (T.K) திருச்சி (D.T)
செல் : 95 66 35 90 29